# கல்வெட்டு

திருவள்ளுவராண்டு 2023 (ஆங்கீரச ஆண்டு) ஆவணித் திங்கள்



இராமன், இலக்குவன், பரதன், சத்ருகனன் ஆகியோரின் பிறப்புக் காட்சி,
ஓவியம் - அழகர்கோயில் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு.

காலாண்டிதழ் - 35 ★ ( 1992, ஆகஸ்ட் திங்கள் ) விலை ரூ. 1-50

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

உள்ளே. . . .

பக்கம்

1. சேரர் காலப் புதிய நாணயம்
— நடன. காசிநாதன் ... 1

2. திருவண்ணாமலைச் செப்பேடு
— கோ. முத்துசாமி ... 5

3. குழுவாணை நல்லூர்
— சி. எம். கணபதி ... 11

4. தமிழகத்தில் முருகன் வழிபாடு
— டாக்டர். நா. மார்க்சியகாந்தி ... 17

5. வஞ்சியும் பெரு வஞ்சியும்
— புலவர். செ. இராசு ... 25

6. எங்கள் மாணவர்கள்...
... 28

7. DELIVERY SYSTEM IN ANCIENT TAMILNADU
— Natana. KASINATHAN ... 34

8. ஜெயங்கொண்டம் புத்தர், மகாவீரர் சிற்பங்கள்
— கா. நெடுஞ்செழியன் ... 37

# சேரர் காலப் புதிய நாணயம்

நடன. காசிநாதன்

முடியுடை வேந்தர்களில் ஒருவரான சேரர் தமிழகத்தின் மேற்குப் பகுதியை ஆண்டு வந்தனர். சங்க காலம் முதல் கி.பி. 15—16 - ஆம் நூற்றாண்டு வரை சேரரின் ஆட்சி தமிழகத்தின் யாதாவதொரு பகுதியில் இருந்து வந்திருக்கிறது. சங்க காலத்தில் மேற்குக் கடற்கரையோரப் பகுதியில் இருந்த வஞ்சியைத் தலை நகராகக் கொண்டு ஆண்டவர்கள் கி.பி. 8-9-ஆம் நூற்றாண்டுகளில் தற்காலத்தியக் கரூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்திருக்கலாம் போன்று தெரிகிறது. கி.பி.12-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு தமிழகத்தில் தென்கோடிப் பகுதியான கன்னியாகுமரிப் பகுதியினை வேணாடு என்ற பெயரில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்தனர்.

ஒவ்வொரு காலக் கட்டத்திலும் சேர மன்னர்கள் நாணயங்களை வெளியிட்டிருத்தல் வேண்டும். குறிப்பாகச் சங்க காலத்தில் தமிழகத்தில் நடைபெற்ற வெளிநாட்டு வாணிபத்தில் மேற்குக் கடற்கரை குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. ஆதலால் சங்க காலச் சேரர் கட்டாயம் நாணயங்களை வெளியிட்டிருத்தல் வேண்டும். சங்க இலக்கியமான பதிற்றுப்பத்தில் காணம், பொன் போன்ற நாணயங்களின் பெயர்கள் காணப்படுகின்றன. அவைகளின் வடிவங்கள் பற்றி எந்தக் குறிப்பும் காணப் பெறவில்லை.

சங்க காலக் காசுகள் என்று தமிழகத்தில் சில நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவை பெரும்பாலும் சதுர வடிவில் உள்ளன. அவற்றில் சிலவற்றில் ஒரு பக்கம் யானையின் உருவமும், மறுமக்கம் மீன் உருவமும் காணப்படுகின்றன. இது மீன் உருவம் அல்ல, வைகை ஆற்றோடு கூடிய மதுரை நகர அமைப்பு என்று சிலர் கூறுவதாகத் தேசிகாச்சாரி தெரிவித்துள்ளார்.[1] உறுதியாக மீன் உருவம் அல்ல என்று கூறுகின்றனர்.[2] இக்காசுகள் சங்க காலச் சேரர்களது காசுகளாக இருக்கலாம் என்று கருதப் படுகிறது.[3]

இக்காசுகளை அடுத்து இப்பகுதியில் கி.பி.12-ஆம் நூற்றாண்டு வாக்கில் வெளியிடப்பட்ட சில காசுகள்தான் கண்டெடுக்கப் பட்டுள்ளன. இக்காசுகள் வெள்ளியால் ஆனவை. இவற்றில் ஒரு பக்கம் 'வீரகேரளஸ்ய' என்ற நாகரி வாசகம் இரு வரிகளிலும், இவ்வரிகளுக்கு இடையில் இடப்புறமாக ஊர்ந்து செல்லும் முதலை யின் உருவமும் பொறிக்கப்பட்டிருக்கின்றன. இது முதலையின் உருவம் இல்லை, ஒரு பூ உருவமேயாகும் என்று அண்மை யில் கூறப்பட்டுள்ளது.[4] மறு பக்கத்தில் ''ஸ்ரீ கண்டராங்குசஸ்ய'' என்ற நாகரி வாசகம் இரு வரிகளிலும், அவ்வரிகளுக்கிடையில் கலசமோ அல்லது கும்பமோ பொறிக்கப்பட்டு காணப்படுகின்றது. இந்நாணயங்கள் கேரள மன்னன் வீரகேரளவன்மரால் (கி.பி.1127) வெளியிடப்பபட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. 'கண்டராங் குஸ' என்ற வாசகம் கண்டர்களுக்கு (களப்பிரர்களுக்கு) அங்குசம் போன்றவன் என்று கொள்ளப்படுகிறது.

பிற்காலத்தில், அதாவது கி. பி. 15—16-ஆம் நூற்றாண்டுகளில் ஆட்சிபுரிந்த வேணாடு மன்னர்களால் வெளியிடப்பட்ட சில காசுகள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. கலியுகராமன், சேரகுலராமன். பாஸ்கரவர்மன், மார்த்தாண்டவர்மன் ஆகியோர் காலத்தில் வெளி யிடப்பட்ட காசுகளாகும் இவை. இக்காசுகள் சென்ற சில ஆண்டுகளுக்கு முன்பு வரை பிற்காலப் பாண்டியர்களால் வெளி யிடப்பட்டவை என்று கருதப்பட்டு வந்தன.[5] அண்மைக் காலத்தில் தான் இவை சேர மன்னர்களால் வெளியிடப்பட்டவை என்று நிரூபிக்கப்பட்டன.[6] மேற்கூறியவற்றில் ''கலியுகராமன்'' என்று பொறிக்கப்பட்டுக் காணும் காசு மட்டும் பாண்டிய மன்னனைத் தான் சார்ந்திருக்கவேண்டும் போன்று தோன்றுகிறது. ஏனெனில் கி.பி.16-ஆம் நூற்றாண்டில் ''அன்றாடு வழங்கும் நென்மேலி கலியுகராமன் பணம்[7] என்று குறிப்பிடப்படுகிறது. நென்மேலி என்று இங்கு குறிப்பிடப்படுவது நெல்வேலி என்ற ஊரைக் குறிப் பிடுவதாகும். கி. பி. 16-ஆம் நூற்றாண்டில் திருநெல்வேலிப் பகுதி யில் பாண்டியர்களில் ஒரு பிரிவினர் ஆண்டு வந்தனர். ஆதலால் நெல்வேலியிலிருந்து வெளியிடப்பட்டிருக்கும் இந்நாணயம் பாண்டியர்களால் வெளியிடப்பட்டிருத்தல் வேண்டும். நெல்வேலி மாறன் என்னும் பாண்டிய மன்னன் கி.பி. 1552 முதல் 1564 வரை ஆட்சி புரிந்துள்ளான். அவனால் இக்காசு வெளியிடப்பட்டிருக்க லாம். இக்காசில் 'திருவடி' உருவம் காணப்படுவது சேர நாட்டில் புழக்கத்தில் உள்ளது என்று காட்டுவதற்காக இருக்கலாம். சோழ மன்னன்ர் முதலாம் இராஜராஜன்கூட தம் காசுகளில் 'திருவடி'

பொறித்து சேர நாட்டில் பழக்கத்தில் புகுத்தியிருக்கிறான். 'பூதலவீர' என்று பொறிக்கப்பட்டுள்ள சில காசுகளும் சேரர் காலத்தியதே என்று கூறப்படுகிறது. கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த பூதல வீர சிறீவீர உதையமார்த்தாண்டவன்மர் அல்லது பூதலவீரசிறீ இரவிவன்மர் ஆகிய இருவரில் ஒருவரால் வெளியிடப்பட்டவையாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.[8]

அண்மையில் எமது துறை அலுவலர் திரு வெ வேதாசலம் தாம் சேகரித்து வைத்திருந்த சில காசுகளைக் காண்பித்து யார் காலத்தியதாக இருக்கலாம் என்று கூறும்படி என்னைக் கேட்டார். அவர் காண்பித்த காசுகளில் ஒரு காசில் ஒரு பக்கம் ஈழ மனிதன் இடப்பக்கம் திரும்பி நின்ற நிலை உருவமும், மறுபக்கம் ஈழ மனிதன் அமர்ந்த நிலை உருவமும் அவ்வுருவத்தின் இடப்பக்கம் தமிழ் எழுத்தில் "பூதல வீர ராமன்" என்று மூன்று வரிகளில் எழுதப்பெற்றும் உள்ளது. எழுத்துக்களின் மேல் பகுதியில் பனை மரம் அல்லது விளக்கு மற்றும் நான்கு புள்ளிகள் காணப்படுகின்றன.

இந்தப் புதிய காசு கிடைத்திருப்பதன் மூலம் 'பூதல', 'பூதல வீர' என்று பொறிக்கப்பட்டுக் காணப்பெறும் பிற காசுகளும் "பூதல வீர இராமன்" என்பவராலேயே வெளியிடப்பட்டிருக்கலாம் என்று கருதலாம். இக்கருத்தை ஒரு யூகமாக புடால்ப்ஃ அவர்கள் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்கள்.[9] தற்பொழுது அவர்களால் உறுதியாகக் கூறிட போதிய சான்றுகள் இல்லை.

கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம் தாணுமாலயக் கோயில் கோபுர வாயிலின் வடக்குச் சுவரில் கொல்லம் ஆண்டு 722-இல் ஒரு கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது.[10] இது செயதுங்க நாட்டு சங்கரநாராயணமூர்த்தி வேளைக்காரன் என்ற பெயருடைய வென்று மன்கொண்ட "பூதலவீர இராமவன்மர்" என்பவர் விட்டலேசுவர மகாராசாவின் நன்மைக்காகப் பெருமான் தென் திருவேங்கட விண்ணவர் எம்பெருமானுக்கு அமுது படிக்கும், திருவாராதனைக்குமாகப் பணமும் நெல்லும் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது. இக்கல்வெட்டின் காலம் கி.பி.1546 ஆகும். மேலே குறிப்பிட்ட காசுகளில் காணப்பெறும் எழுத்தமைதியும் கி. பி. 16-ஆம் நூற்றாண்டினதாகவே காணப்படுகிறது. ஆதலால் 'பூதல' 'பூதல வீர' என்று பொறிக்கப்பெற்றிருக்கும் காசுகளும், 'பூதல வீர ராமன்' என்று பொறிக்கப்பெற்றிருக்கும் காசும் சங்கர நாராயணமூர்த்தி

வேளைக்காரன் என்னும் வென்றுமண்கொண்ட பூதல வீர இராம வன்மராலேயே வெளியிடப்பட்டிருத்தல் வேண்டும் என்று உறுதியாகக் கூறலாம். இம்மன்னர் வேணாட்டைச் சேர்ந்த சேர மன்னராவார்.

**அடிக்குறிப்புகள்**

1. தேசிகாச்சாரி டி. தென்னிந்திய காசுகள் (ஆங்கிலம்) பக்கம் 157
2. நாகசாமி இரா. டாக்டர், தமிழ்க் காசுகள் (ஆங்கிலம்) பக்கம் 6
3. பக்கம் 10
4. பக்கம் 15
5. பக்கம் 16
6. தேசிகாச்சாரி, டி. தென்னிந்திய காசுகள் பக்கம் 163-164
7. கல்வெட்டு காலாண்டு இதழ் - டாக்டர். இரா. நாகசாமி
8. பக்கம் 3
9. பக்கம் 3
10. புடால்ப், சி. எச். பாண்டியர் காசுகள் (1966) பக்கம் 15
11. நடன. காசிநாதன், கன்னியாகுமரி கல்வெட்டுகள், இரண்டாம் தொகுதி தொடர் எண். 1968 / 241.

---

திருச்சி மாவட்டம், உடையார் பாளையம் வட்டம், ஜெயங்கொண்டத்தில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தனவாகக் கருதத்தக்க புத்தர், மகாவீரர் ஆகியோரின் சிலைகள் முறையே தெற்கு வெள்ளாளத் தெருவிலும், மேலவெள்ளாளத் தெருவிலும் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. போதி மரத்தோடு கூடிய புத்தர் உருவம் மிக அரியது. மகாவீரர் முக்குடையுடன் காணப்படுகிறார். புத்தர் சிலை 170 செ மீ. உயரமும், மகாவீரர் சிலை 73 செ.மீ. உயரமும் உடையன.

# திருவண்ணாமலைச் செப்பேடு

(24 மனைத் தெலுங்குச் செட்டியார் பற்றியது)

**கோ. முத்துசாமி**
கல்வெட்டாய்வாளர்

பஞ்சபூத தலங்களுள் "தீபம்" - எனும் சோதி வழிபாட்டுத் தலமாக விளங்குவது திருவண்ணாமலை ஆகும். இங்கு வசிக்கும் திருவண்ணாமலை 24 மனைத் தெலுங்குச் செட்டியார்கள் சங்கத் தலைவர் திரு. பெ. கோவிந்தசாமி அவர்களிடம் கிடைத்த இச்செப் பேடு, "அருணாசலேஸ்வரர், உண்ணாமலை அம்மன் துணையாக" என்று தொடங்குகிறது. முன்பு அரியும் அயனும் அடியும் முடியும் தேடியும் எட்டாத பெருமானாகியவர் யுகங்கள் தோறும் பல அவதாரங்களை எடுத்துக் கலியுகத்தில் சிவபெருமானாகக் காட்சி அளிக்கிறார் என்று கூறுகிறது. இச்செப்பேட்டின் காலம் கி.பி. 1622 ஆகும். செப்பேட்டு வாசகம் தவறுகள் மலிந்து காணப் படுகிறது.

## தலப் பெருமை

96 பிரம்மாக்கள் இங்கு இறைவனைப் பூசை செய்துள்ளனர். கௌதமரிஷி, எட்டு திக்கு பாலகர்கள், சூரியன், சந்திரன் முதலா னோர் பூசித்த தலம். பருவதராசன் மகளாகிய ஈஸ்வரிக்குத் தனது உடலில் சரிபாதி அளித்து அர்த்தநாரீஸ்வரனாக (உமையொரு பாகனாக) நின்ற தலம். மயிடாசுரனென்னும் அரக்கனை வென்று அழித்து படிக லிங்கம் எடுத்து ஈஸ்வரிக்குப் பூசை செய்ய அளித்த தலமானதால் நினைத்து உருகி அருணாசலமே என்று அழைத்தால் முக்தி தருவோம் என அபயக்கை அளிக்கும் பெருமையுடையது. திருக்கார்த்திகை தீபாராதனையில் தரிசனம் காண வந்த 84 லட்சம் பேர்களுக்கு முக்தி அளித்த தலம் என்று திருவண்ணாமலையின் பெருமை செப்பேட்டில் குறிக்கப்படுகிறது.

## 24 மனைத் தெலுங்குச் செட்டியார்கள் வரலாறு

திருக்காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர், திருக்கோட்டு மகாமுனி, காமாட்சி அம்மன் வரத்தினாலும், கமலைபதி ஸ்ரீகாமாட்சி அம்மையின் கருணையாலும் திருக்கோட்டு மகரிஷி திருத்தொடையில்

இத்தெலுங்குச் செட்டியார்கள் பிறந்ததாகக் கூறப்படுகிறது. பிறகு அவர்களில் குலப் பெருமையும், அவர்கள் தம் குல தெய்வமாகிய காஞ்சி காமாட்சி அம்மனுக்குப் படையல் இடும்போது, அம்மையின் வரப்பிரசாதத்தினால் மதுப்பானைகள் பால்பானைகள் போலவும் மாட்டின் தலைகள் மான் தலைகள் போலவும் மாற்றம் பெற்றுக் காட்சி அளிப்பதாகக் கூறப்படுகிறது. எனவே முக்காலத்தில் இவ்வினத்தவர் தம் குல தெய்வமாகிய காமாட்சி அம்மன் கோயிலில் மது, மாமிசம் வைத்துப் படையலிட்டு வழிபட்டு வந்தமை புலனாகியது.

## 24 மனைச் செட்டியார்கள் வருமாறு

தொண்டை மண்டலத்தின் 24 கோட்டங்களும் 24 மனையென இங்குக் கூறப்பட்டு 24 வகைத் தெலுங்கு செட்டியார்கள் யார் என்ற விவரமும் கூறப்பட்டுள்ளது. அவை:-

1. மும்முடியவன், 2. வம்மையவன், 3. வர்சிவன், 4. செஞ்சி வங்கிறவன், 5. மக்கிடவன், 6. சொற்பனவன், 7. எடுக்கவயன், 8. தரிச்சுவன், 9. தயிறவன், 10. குதிரை வல்லவன், 11. தவிலையவன், 12. நெட்டையவன், 13. கலிலவன், 14. கொல்லபன், 15. வெலிவங்கிறவன், 16. யக்கவனன், 17. நதவன், 18. பவிதயவன், 19. கெந்தியவன், 20. வருமயவன், 21. கொற்கவன், 22. கொட்டையவன், 23. சூரியவன், 24 கெடிசிரியவன், என்பவை இந்த 24 மனையாகும். பூலோகக் கயிலாயமாகிய திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் உண்ணாமலை அம்மன் கோயிலில் தர்ம மடமும், நந்தவனமும் அமைத்து அனைவரும் கூடி வசந்தராய பண்டாரத்தைத் தீர்மானித்து, கலியாணத்துக்கு ஒருதலைக்கட்டுக்கு யார் யாருக்கு எவ்வளவு அளிக்க வேண்டும் என்ற விவரமும் கூறப்பட்டுள்ளது.

## செப்பேட்டின் காப்பு வாசகம்

நான்கு கடல் எல்கைக்குட்பட்ட 24 மனையாரும் சந்திர, சூரியன் உள்ள வரைக்கும் தர்மம் காக்க வேண்டும். இத்தர்மத்திற்குத் தீங்கு நினைப்பவர் காசியில் கங்கைக் கரையில் காராம் பசுவைக் கழுத்தறுத்த பாவத்திலே போவார்கள். இத்தர்மத்தை நன்கு நடத்துபவர்கள் உத்திர கொத்திரமாய் இருப்பார்கள் என்றும் வாசகம் கூறுகிறது. இந்த தர்மம் 24 வகையறா செட்டியாராகிய வம்மிய கோத்திரம் அண்ணாமலைச் செட்டியார் வசம் ஒப்படைப்பதாகக் கூறிச் செப்பேடு முடிவு பெறுகிறது.

## குறிப்பு

இச்செப்பேடு, ஒரே தகட்டில் உள்ளது. இரண்டு பக்கமும் சேர்த்து 91 வரிகள் எழுதப்பட்டுள்ளன. செப்பேட்டின் மேல் பகுதியில் விநாயகர், சிவலிங்கம், நந்தி, முருகன் என்ற நான்கு கடவுளரின் உருவங்கள் உள்ளன. செப்பேட்டின் நீளம் 35.7 செ.மீ. அகலம் 20.2 செ.மீ. எடை 860 கி. ஆகும். இச்செப்பேட்டுப் படி இன்றும் திருவண்ணாமலை நந்தவனம் அவர்களால் பராமரிக்கப் பட்டு வருகிறது.

## செப்பேடு

(24 மனைத் தெலுங்குச் செட்டியார்கள் பற்றியது)

1. ெ அறுணாசலெயீஷ்பரர் துணையாகவும் உண்ணாமலை அம்மன் து
2. ணைஉ ஸ்ரீ அகிலாண்ட கொடி பிறமாண்ட னாயகறாகிய அ
3. றுணாசலயீஷ்பரரை அரியயன் அடியும் முடியும் தெடியும்
4. அரிதாகிய மனசுக்கெட்டாத அண்ணாமலையாறாகிய கிரி
5. கெறையதா யுகத்திலயெ அலஷ்சத்து உயபுத முதல வு
6. றைதருசொ திருபங்கொண்டெழுந்தருளிய தெறெதா
7. யுகத்தில் உ யஉ லஷ்சத்து அயஉத முதல் வரை றா நவ
8. றத்தினகிரி சுருபங்கொண்டெழுந்தருளிய துவாப
9. ரி யுகத்தில் அலஷ்சத்திய் ।சு யசத முதல் வரை றா சொற்
10. னரூபங் கொண்டெழுந்தருளிய கலியுகத்தில் அலஷ்
11. சத்து யஉ.த முதலவனானாள சிவாரூபங் கொண்டெழுந்
12. தத(ரு)ளிய யிப்படி யுகங்கண்ட தொறும் வெறுவெறாகிய சுரூப
13. ங் கொண்டெழுந்தறுளி யிருக்கிடை மகிமெயெ, பிற
14. ம்மா, விஷ்ண்ணு அடியும் முடியும் தெடுதர்ர்க்கரிதா
15. கிய மகாலிங்கமாய் யெழுந்தருளிய அண்ணாம
16. லையார் ரெண்டும் பெயரெனையுடைய ஷ்தலம் தொ
17. ன்னூத்தாரு பிறம்மா பூசை பண்ணியஷ்த்தலம் கெ
18. வுதமறிஷி ஆஷத்தினாங் பண்ணிய ஷத்தலம் அஷ்ட
19. திக்கு பாலகர் சந்திராதித்தர் பூசை பண்ணிய ஷத்த

20. ல்மாயுடைத்தாகிய தனியுரு திருவண்ணாமலை யென்
21. டும் பெயரெனையும் ஆதி அருபமாகிய சிதமாயி மத்திய
22. சதமான தெய்வ ரூபமான பருவதராசன்புத்திரி ஆகி
23. ய யீசுபரிக்கி அற்தா பாகம் அளித்த ஷத்தலம் துறக
24. லிகனாயகி அம்மன் மயிடாகுரனெ வெண்ணு படிக்கு
25. லிங்கம் எடுத்து யீஸ்பரிக்கி அளித்த ஷ்தலம் வச்சிளங்
26. கித பாண்டியனுக்கு அனுக்கிறகம் பண்ணிய ஷத்த
27. லம் நசையிலெ யாவதும் வசையிலெ யாவதும் ம
28. னப்பூறுவமாக அருணாசல மெண்டும் நினைக்க முத்தி
29. தருவொ மெண்டு அபைய அஷ்த்தம் காட்டிய திருக்காற்
30. த்திகை தீபாறத்தினையில் தெரிசினம் பண்ணின எ
31. ன்பத்துனாங்கு லஷ்சம் யொனி பெதமான சீவுன
32. சிவனுக்கும் மொஷ்சம் குடுக்கப்பட்ட ஷத்தலம் சாலி
33. யவாகன சீளஷத்தும் சதருளச(ய)யச ஹெ வறுஷத்து
34. க்கு மேல் செல்லாநிண்ட செய பிறட்டாசி மீ ரு உ
35. ரொகணிநஷ்த்திரம் சதுர்த்தெசி செக்கிறவாறனாள் தி
36. ருக்காஞ்சிபுரம் யெகாம்பரனாதர் திருக்கொட்டு மகா
37. றிஷி தெவி தெவர் யிருவர் காமாஷ்சி கமலைபதி காமா
38. ஷி சிவத்தினால் வந்த கன்னாலத்தார் திருக்கொட்டு கத
39. வறைகள் குலத்தினுயர்ந்ததொர் திருக்கொட்டும
40. காறிஷி. திருத்தொடை யில் பிறந்தொர் சமையஏகா
41. லாகலன் சங்கீத லோலாசமைங உ.த்தநன்டா சமை
42. யதும்ம பிறமததார் சமையனாளியதை சமையகொ
43. லாகலா உத்தமறகள் உச்சிதவீரப்பண்ணர் அசத்தியரி
44. ச்சந்திரன் அபுதராாக சடையிலும் கணக்கிலும் வெத்தி
45. லும் பெரியொர் குணமுடைய மனதயிரிய தெவனுகா
46. வெனி கெசர சனமயத்தொர் கண்ட கணக்கத்தார் மாலை
47. மாரபரசிங்க கொடித்தலைவர் யொங்காளி பட்டவற்
48. த்தன.ர் குஞ்சரம் வெண்ணவர் ளயசமுக்கம் வெண்
49. ணவர் சக்கரைக் கொட்டை கெளிச்சவர் வெள்ளை
50. வடக்குடை வெணிகரி வெணங் கொடி வெள்ளை வெ
51. ணஞ்சா மரம் லிசைய கொலாகா தச்சு ரூபடி ஆல

52. வட்டம் பகல் தீவட்டி பஞ்சவிருது விருதுகள் பிடித்தவர்
53. மது பானை பால் பானை ஆனதும் மாட்டுத் தலை மான் தலை
54 ஆனதும் திருக்காஞ்சிபுரம் காமாச்சி அம்மன் வரணிறசா
55. ததினால் வந்தமும் முடியவன், வம்மையவன், வர்சிவன்,
56. கெஞ்சி வங்கிறவன், மக்கிடவன், சொறபனவன், எடு
57. க்கவயன், தரிச்சுவன், தயிறவன், குதிரை வல்லவன்,
58. தவிலையவன், நெட்டையவன், கவிலவன், கொல்லபன்,
59. வெலிவங்கிறவன், யக்கவனன், நதவன், பவிதயவ
60. ன், செந்தியவன். வருமயவன், கொறகவன், கொட்டை
61. யவன், சூரியவன், கெடிகிரியவன் யிவர்கள் யிரு
62. வந்துனாலு மனையார் பூலொக கயிலாசம் திருவண்ணா
63. மலை அறுணாசலஸ்ஷ்பரர் உண்ணாமலை அம்மன்
64. சன்னிதானத்திலெ யிருவத்து னாலு மணையார்
65. தெசங்கா தற்ம மடம் வநதவானம் இத்தற்ம
66. மங்களுக்கு னாங்கள் அனவரும் கூடி வசந்தராய
67. பண்டாறத்தை நிற்ண்ணையம் பன்னி வச்சொம்
68. யிதுக்கு மடம் நந்தவானம் உள்பட தலைக்கட்டு
69. ஒன்னுக்கு பு கலியாணத்துக்கு முகுற்த்த
70. ம் ஒன்னுக்கு பு பொதி ஒண்ணுக்கு அள்ளுகால்
71. படி மகமை பு செட்டியாற்கு பொதி
72. ஒன்றுக்கு பு ப கலியானம் ஒன்றுக்கு பு க
73. சங்கீதக்காறணுக்கு கலியாணத்துக்கு பு க கட்டு காணி
74. க்கை பு க மாணிக்கத்தாளுக்கு கலியாணத்துக்கு பு க
75. விடுதீ மாணிக்கத்தாளுக்கு கலியாணத்துக்கு பு எ
76. பொதி ஒண்ணுக்கு அள்ளு கால்படி யிந்த படிக்கி
77. னாலு சமுத்திரம் உள்பட யிருக்கப்பட்ட யிடுருவத்துனா
78. லுமணயாரும் சத்திர சூரியாள் உளமட்டுக்கும்
79. தற்மம் பண்ணிகுடுத்தது யிதுக்கு ஆதாமொருத்தர்
80. கன்னாலெ பாத்து காதினாலெ கெட்டு யித்தற்மத்து
81. க்கு யாதமொருத்தர் ஆத்தா குத்தம் ஆசாத்தியம் பண்ணி
82. னால் காசியிலெ கெங்கை கறையிலெ காறாம் பசுவை

83. கழுத்தறுத்த பாவத்திலேப் பொகவும் கொவத்தி பிறம
84. மத்தி செய்த பாவத்திலெ பொககடவெனாகவும் அன்
85. ணா மலையார் உண்ணமுகில் அம்மன் துணை ஆகவும்
86. உ யிந்ததற்மம் நடபிக்குவர்கள் உத்திர கொத்திரமாயி
87. யிருக்க வெணும் சிவமயம் உராம செயம் உ உ உ
88. யிந்ததற்மம் நம்ப உயபச மனை றா செட்டியாறாகிய வம்மியகொ
89. த்திறம் அண்ணாமலை செட்டியார் வசம் ஒப்பிச்சொம் அவக யி
90. ந்ததற்ம விசாறணை பாற்றாறது அவருறாவரத்தினை பனமு
91. ம் அள்ளுபடிவம் வெகுமதியும் நடவிறாறதுறு செயம்

---

## திருப்பைஞ்ஞீலி ஏரிக் கல்வெட்டு

கே. ஸ்ரீதரன், பதிவுஅலுவலர்

திருச்சியிலிருந்து சுமார் 25 கி.மீ. தொலைவில் உள்ள திருப்பைஞ்ஞீலி நீலவனேஸ்வரர் கோயில் சம்பந்தர், அப்பர் சுந்தரர் ஆகியோரால் பாடப் பெற்றது. சோழ, பாண்டிய, விசயநகர மன்னர்களின் கல்வெட்டுகளை உடையது.

கோயிலிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் துறையூர் செல்லும் சாலையில் உள்ள புதுக்குளம் என்ற குளத்தின் கிழக் கரையில் தூம்பொன்று உள்ளது. அண்மைக்காலத் தூம்புக்கல் அதில் இருப்பினும், பழைய கல்வெட்டுடன் கூடிய தூம்புக்கல்லும் அருகிலேயே கிடக்கின்றது. 9 அங்குல நீளமும் 5 5 அடி அகலமும் கொண்ட இக்கல்லில் சுமார் 12-ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் எட்டுவரிகளில் கல்வெட்டுக் காணப்படுகிறது.

முற்றுப் பெறாத இக்கல்வெட்டு, **ஸ்வஸ்திஸ்ரீ** ஸ்ரீகோ விராஜ கேசரி பன்மர்க்கு யாண்டு ரு-ஆவது திருவெள்ளறை தகிருட . . . . என்பதனுடன் நின்று விடுகின்றது. இரண்டாம் குலோத்துங்கன் இக்கோயிலுக்குப் பல தானங்களைச் செய்தளித்திருக்கிறான். ஆயிரத் தளியில் அநபாயன் என்ற சிம்மாசனத்தில் அமர்ந்திருந்த போது திருப்பைஞ்ஞீலி உடையாருக்கு அநபாயநல்லூர் என்ற ஊரைப் புதிதாக அமைத்துத் தானமளித்ததாக இவ்வூர்க் கோயிற் கல்வெட்டு குறிப்பிடுகிறது· *(216/1943-44)*. எனவே மேற்கண்ட தூம்பும் இவனது காலத்தைச் சார்ந்ததாகக் கொள்ளலாம். திருவெள்ளறை ஊரும் அருகிலேயே உள்ளது.

# குழுவாணை நல்லூர்

**சி. எம். கணபதி,** எம்.ஏ.
நூலகர், தொல்பொருள் ஆய்வுத்துறை

**முன்னுரை**

சிதம்பரனார் மாவட்டம், கோயில்பட்டி வட்டத்தில் கழுகு மலை என்னும் பேரூர் இருக்கிறது. கழுகுமலை வரலாற்றுப்புகழ் மிக்க சமணத்தலம். கழுகுமலையில் ஏறக்குறைய நூறு கல்வெட்டு கள் இருக்கின்றன. இக்கல்வெட்டுகளில், கழுகுமலை 'நெச்சுரம்'[1] என அழைக்கப்படுகிறது. இந்த நெச்சுரம், திருநெச்சுரம்,[2] பெரு நெச்சுரம்[3], இளநெச்சுரம்[4] என மூன்று பகுதிகளைக் கொண்டிருந்தது என்பதைக் கல்வெட்டுகளால் அறிய முடிகிறது. பண்டைநாளில் கழுகுமலை 'நெச்சுரநாடு'[5] என்னும் நாட்டுப்பிரிவின் தலைமை யிடமாகத் திகழ்ந்தது. 'அச்சுறுவாம் அணவி வேந்தன் நெச்சுர நாடு,'[6] 'எழிலமை நெச்சுரநாடு'[7] 'வளமிக்க மருதவேலி இள நெச்சுரம்'[8] என்று தளவாய்புரச் செப்பேடும், 'இராஜராஜப்பாண்டி நாட்டு முடிகொண்ட சோழவள நாட்டு நெச்சுரநாட்டு நெச்சுரம்'[9] என்று கழுகுமலைக் கல்வெட்டும் புகழ்ந்து கூறுகின்றன. பண்டையக் கழுகுமலையில், நாட்டுச்சபை, பேரூர்ச்சபை, ஊர்ச்சபை போன்ற சபைகள் இருந்து செயல்பட்ட செய்தியை, 'நெச்சுரநாட்டு நாட்டார்'[10] என்று தளவாய்புரச் செப்பேடும், 'திருநெச்சுரத்துப் பேரூரார்'[11] 'பெருநெச்சுரத்து ஊரால் இசைந்த ஊரோம்'[12] என்று கழுகுமலைக் கல்வெட்டுகளும் எடுத்துக் கூறுகின்றன. இத்தகு வரலாற்றுச் சிறப்புமிக்க பண்டைய கழுகுமலையில், சமணத் துறவிகள் தங்கிச் சமணசித்தாந்தம் பயின்றனர். இங்ஙனம் அங்கேயே தங்கிச் சமணசித்தாந்தம் உரைக்கும் ஆசிரியர்களுக்கும் (படாரர்) கற்கும் மாணாக்கர்களுக்கும் (வயிராக்கியர்) நிலக் கொடையாகக் குழுவாணைநல்லூர் என்னும் ஊர் வழங்கப்பட்டது. இக்குழுவாணை நல்லூர் என்னும் பெயர் பற்றி ஆய்வதே இக் கட்டுரையின் நோக்கமெனலாம்.

## கல்வெட்டுச் செய்திகள்

கழுகுமலையிலுள்ள இருகல்வெட்டுகள் குழுவாணை நல்லூர் என்ற ஊரினைக் குறிப்பிடுகின்றன.[13] இந்த இரு கல்வெட்டுகளும், ஒரே அரசனது, ஒரே ஆட்சியாண்டைச் சேர்ந்த, ஏறக்குறைய ஒரே மாதிரியான செய்திகளைக் கூறுகின்ற கல்வெட்டுகளாகும். கல்வெட்டுகள் இரண்டும், பாண்டியன் பராந்தக வீர நாராயணனின் காலமான கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை.[14] இரண்டும் வட்டெழுத்துக் கல்வெட்டுகள். கல்வெட்டுச் செய்தியின் சுருக்கம் வருமாறு:

நெச்சுரநாட்டுத் திருநெச்சுரத்துத் திருமலைத் தேவர்க்கு, குணசாகரர்[15] என்னும் சமணமுனிவர் குழுவாணை நல்லூர் என்னும் ஊரைத் தானமாக வழங்கினார். திருமலையில் அமர்ந்து சமண சித்தாந்தம் பயில்கின்ற ஆசிரியர்களும் மாணவர்களுமாகிய சமணத் துறவிகளுக்காக இக்குழுவாணை நல்லூர் வழங்கப்பட்டது. இச் சமணத்துறவிகளுக்கு இலவச உணவு (ஆகாரதானம்) வழங்க விரும்பிய, தும்பூர்க்கூற்றத்துக் காடந்தைக்குடி தர்மவித்தனான ...யாமாறர், மிழலைக் கூற்றத்துப் பெருநாவலூர்......தாசனாகிய மாதேவன் நக்கன் ஆகிய இருவரும் தங்களது கை முதல் போட்டு, தளித்தனியே இரு கிணறுகள் வெட்டுவித்து, அந்த இரு கிணறுகளையொட்டியமைந்த நிலங்களையும் தானமாக வழங்கினர். கல்வெட்டுகளில், தானம் வழங்கப்பட்ட நிலங்களின் எல்லைகளும் குறிக்கப்பட்டுள்ளன. இவையே இருகல்வெட்டுகளும் குறிக்கும் செய்திகள் ஆகும்.

## குழுவாணை நல்லூர் - பெயராய்வு

குணசாகரரால் வழங்கப்பட்ட குழுவாணை நல்லூர் என்னும் ஊரின் பெயரில் வருகின்ற குழுவாணை என்ற சொல், ஒரு புதுமையான சொல்லாகத் தென்படுகிறது. இந்த ஊருக்கு இப் பெயர் எந்த அடிப்படையில் சூட்டப்பட்டது என்ற வினா எழுவது இயற்கையே. பண்டைநாளில், ஒரு நாட்டிலுள்ள ஊர்களின் பெயர்கள், அந்த நாட்டின் மொழி, நாகரிகம், பண்பாடு ஆகிய வற்றை அடிப்படையாகக் கொண்டு, அந்த நாட்டின் நிலவியல், மரஞ்செடி கொடிகள், சமயம், வரலாற்று நிகழ்வுகள் போன்ற பல்வேறு மரபுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டன.

கல்வெட்டு குறிக்கும் குழுவாணை நல்லூர் என்னும் பெயரி லுள்ள குழுவாணை என்பதை, குழு+ஆணை எனப் பிரிக்கலாம். குழு என்பதற்குத் தொகுதி, மக்கட்கூட்டம் எனவும், ஆணை என்பதற்கு, ஆங்கிலத்தில், 'Established by the learned people of old' எனவும், தமிழில்' ,ஆன்றோர் மரபு' எனவும் பொதுவாகப் பொருள் கொள்ளலாம்.[17] இதன்படி பார்த்தால், குழுவாணை என்பது "கற்றறிந்த, படித்துத் தேர்ந்த, நன்குணர்ந்து துறைபோய, அறிவு வளம் நிரம்பிய முதியோர் பலரால் முறைப்படி நிலைநிறுத்தப் பட்ட ஆன்றோர் மரபு" என்ற பொருளை வழங்குகிறது. இத்தகைய ஆன்றோர் கூட்டத்தினை,

"நல்வேள்வித் துறை போகிய
தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட்டு உண்ட
புகழ்சால் சிறப்பு"

என்று மதுரைக் காஞ்சியும்,

"பல் கேள்வித் துறை போகிய
தொல்லாணை நல்லாசிரியர்"

என்று பட்டினப்பாலையும் கூறுகின்றன.

இந்நிலையில், கல்வெட்டில் வரும் 'குழுவாணை' என்ற சொல்லுக்குச் சமண சமய அடிப்படையில் பொருள் கொள்வோ மானால், "அறிவு நலம் சான்ற பெரியோர் பலரால் உரைக்கப்பட்ட சித்தாந்தம்" என்று கூறலாம். குழு என்பதற்குப் பொதுவாக கூட்டம், தொகுதி என்று பொருள் கொள்ளப்பட்டாலும், சமண சமயத்தில் இச்சொல்லுக்கு, 'ஆசிரிய உபாத்யாய சாதுக்களின் கூட்டம்' என்றே பொருள் வழங்கியதாக அறிகிறோம்.[18] திருத்தக்க தேவரின் சீவகசிந்தாமணியில்

"பன்மாண் குணங்கட் கிடனாய்பகை நண்பொ டில்லாண்
தொன்மாண் பமைந்த புனைநல்லறந் துன்னி நின்ற
சொன்மாண் பமைந்த குழுவின் சரண்சென்று தொக்க
நன்மாண்பு பெற்றேனிது நாட்டுதன் மாண்பு பெற்றேன்"

என வரும் இறைவணக்கப் பாடலுக்கு உரையெழுதிய நச்சினார்க் கினியர், "உறவும் பகையும் இல்லாதான் கூறிய நற்குணங்கட்கு இருப்பிடனாய்ப் பழையதாகிய மாட்சிமையமைந்த அறத்தையும்,

அதனைப் பொருந்திநின்ற குழுவினையும் சரணாகச் சென்று சேர்ந்த நல்வினையுடையேனாதலின் இக்கதையை உலகிலே நிலைபெறுத்து தற்கு நல்வினையுடையேன்'' என்று எழுதுகிறார். இங்கு, குழு என்பது, பஞ்ச பரமேஷ்டிகளைச் சேர்ந்த ஆசிரிய உபாத்யாய சாதுக்களைக் குறிக்கின்ற சொல்லாகவும், அறம் என்பது ஜின தருமத்தைக் குறிக்கின்ற சொல்லாகவும் பயின்று வந்துள்ளன.[19] ஆக, குழு என்பது, அறமென்னும் ஜின தருமத்தைப் பொருந்தி நின்ற சமணத் துறவிகளைக் குறிக்கின்ற சொல் என்பது நன்கு விளங்கும்.

அடுத்து, ஆணை என்பதற்குப் பொதுவாக 'ஆன்றோர் மரபு' என்றே பொருள் கொள்ளப்பட்டாலும், சமண சமயத்தில், இச் சொல்லுக்கு, 'ஆன்றோரால் உரைக்கப்பட்ட சித்தாந்தம், மறைத்து சொல்லும் சொற்றொடர், என்று பொருள் கொள்ள இடமுள்ளது. தொல்காப்பியம், செய்யுளியலில்,

''நிறை மொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறை மொழி தானே மந்திரம் என்ப'' (சூத். 480)

என்ற நூற்பா காணப்படுகிறது. இதற்கு உரையெழுதிய பேராசிரியர், 'சொல்லிய சொல்லின் பொருண்மை யாண்டுங் குறைவின்றிப் பயன்படச் சொல்லும் ஆற்றல் உடையவரே நிறை மொழி மாந்தர் எனப்படுவர். இவரது ஆணையாற் கிளக்கப்படடுப் புறத்தார்க்குப் புலனாகாமல் மறைத்துச் சொல்லும் சொற்றொடர் எல்லாம் மந்திரம் எனப்படும்'' என்கிறார்.[20]

எனவே, நிறைமொழி மாந்தரால் மறைவாகக் கூறப்படும் சொற்றொடர்கள் - மரபுகள் (சித்தாந்தம்) ஆயின எனலாம். ஆக, பஞ்சபரமேஷ்டிகளைச் சேர்ந்த ஆசிரிய உபாத்யாய சாதுக்களாகிய ஜினதருமத்தைப் பொருந்தி நிற்கின்ற சமணத் துறவிகள் கூட்டத் தினரால், மறைவாக உரைக்கப்படும் சித்தாந்தம் என்ற பொருளிலேயே, குழுவாணை என்ற சொல் கல்வெட்டில் பயின்று வந்துள்ளது என்று கொள்வதில் தவறேதும் இல்லை.

எனவே, கழுகுமலைக் கல்வெட்டுக் குறிக்கும் குழுவாணை என்பது சமணத் துறவிகளையும் சமண சித்தாந்தத்தையும் குறிக் கின்ற சமணச் சொல் என்பதும், சமணத் துறவிகள் சித்தாந்தம் பயில்வதற்காக வழங்கப்பட்ட ஊராகலின் தானமளிக்கப்பட்ட ஊர், குழுவாணை நல்லூர் என்று பெயர் பெற்றது என்பதும் தெளிவாகிறது.[21]

## அடிக்குறிப்புகள்

1) SII, V, Nos. 307-406; XIV, Nos 31, 42.
2) Ibid.
3) Ibid.
4) Ibid.
5) Ibid.
6) தளவ்ாய்புரச் செப்பேடு, வரி 173.
7) Ibid. வரி 194.
8) Ibid. வரி 195-196.
9) SII, V, No. 307.
10) தளவாய்புரச்செப்பேடு, வரி 173.
11) SII, XIV, No. 42.
12) SII, XIV, No. 307.
13) SII, V, Nos. 405, 406.
14) கல்வெட்டுகளில் ஆட்சியாண்டு தெளிவாக இல்லை. எனினும் ஆய்வாளர்கள், மூன்றாவது ஆட்சியாண்டாக இருக்கலாமெனக் கருதுகின்றனர்.
15) குணசாகரர் என்னும் பெயரில் பல சமண முனிவர்கள் இருந்தனர். கழுகுமலைக் கல்வெட்டுகளில் குறிக்கப்படுகின்ற குணசாகரர், யாப்பருங்கலக்காரிகை உரையாசிரியர் குண சாகரரே எனவும், இவர் கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர் எனவும், இக்கட்டுரை ஆசிரியர், தமது ''தமிழக வரலாறும் பண்பாடும்'' என்ற நூலில் விளக்கியுள்ளார்.
16) Tamil lexicon. pp. 224, 1034.
18) சீவக சிந்தாமணி, உ.வே. சாமிநாதையர் பதிப்பு, பக். 6
19) Ibid. பக். 6
20) தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல் 480.
சில ஒப்புமைகள் : கல்வியல்ல பிராமணர்க்கு இறையிலியாக விடப் பட்ட நிலம் அல்லது கிராமம் 'பட்டவிருத்தி' அல்லது' பட்ட விருத்தி மானியம்' எனவும், மகாபாரதம் படித்துக் கதை சொல்வதற்காக விடப்பட்ட நிலம் அல்லது கிராமம் 'பாரத

விருத்தி' அல்லது 'பாரதப்புறம்' எனவும், ஸ்ரீபாஷ்யம் எனப் படுவதும், வேதாந்த சூத்திரத்துக்கு இராமானுஜர் எழுதியது மான விசிஷ்டாத்வைத பாஷ்யம் விளக்கிச் சொல்லுவாருக்கு விடப்பட்ட நிலம் அல்லது ஊர் 'பாஷ்யவிருத்தி' எனவும் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

21) குழுவாணை என்னுஞ் சொல், ஊர்களுக்கேயன்றி, ஏரி, கிணறு போன்ற நீர்நிலைகளுக்கும், குழுவாணை பூதி என்பது போன்று மனிதர்களுக்கும் பெயராக வழங்கி வந்துள்ள செய்தி கல்வெட்டு களால் அறியக்கிடக்கிறது. (SII, XIV, Nos. 40, 81; கன்னியா குமரிக் கல்வெட்டுகள், தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு. No. 267/1968; EI, XXVIII, Article 17)

---

## துறையின் அண்மைக்காலப் பணிகளும் கண்டுபிடிப்புகளும்

### துவாக்குடி-குமிழி

திருச்சியிலிருந்து 30 கி.மீ. தூரத்தில் உள்ள துவாக்குடியில், முதலாம் குலோத்துங்கன் காலத்திய கல்வெட்டுடன் கூடிய ஏரிக்குமிழி இருப்பது திருச்சி பதிவு அலுவலர் திரு. கே. ஸ்ரீதரன் அவர்களால் கண்டறியப்பட்டது. இக்குமிழியை அமைத்தவன் உலகவிடங்கப் பேரரையன். இவ்வூர் அக்காலத்தே 'துழிகுடி' என வழங்கப் பெற்றது.

### திங்கள் பொழிவு

துறையின் ஆய்வாளர்களும், பிற அறிஞர்களும் கலந்துரை யாடவும், கருத்துகள் பரிமாறிக் கொள்ளவும் வசதியாகத் துறை திங்கட்பொழிவினை ஏற்பாடு செய்கிறது. அந்த வகையில் 1992 ஜூலை மாதம் 27-ஆம் நாள் டாக்டர். பத்மா சுப்ரமணியம் அவர்கள் 'அண்மைக்கால இந்தோனேஷியப் பயணம்' என்ற தலைப்பில் தான் இந்தோனேஷியாவில் பார்த்தும், கேட்டும் அறிந்த தமிழகப் பண்பாடு, சமயம் குறித்த செய்திகளைப் பகிர்ந்து கொண்டார்.

அடுத்து ஆகஸ்டு திங்கள் 26-ஆம் நாள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் முதுநிலை ஆய்வாளரான டாக்டர். அர. விஜயலட்சுமி அவர்கள் 'தமிழிலக்கியத்தில் ஊழும் வினையும்' என்ற தலைப்பில் உரையாற்றினார். ஆசீவக சமயத்தினைப் பற்றிய ஆய்வில் சிறந்த தேர்ச்சி பெற்று நூல் எழுதியுள்ள அவர். ஊழுக்கும் வினைக்கும் உள்ள தொடர்பினையும், ஒற்றுமை வேற்றுமைகளையும் சிறப்பாக விளக்கினார்.

# தமிழகத்தில் முருகன் வழிபாடு

**டாக்டர். நா. மார்க்சியகாந்தி**

கல்வெட்டியல் உதவிக் கண்காணிப்பாளர்

இனக்குழு மக்களிடையே பல்வேறு வகையான சமய நம்பிக்கைகள் இருப்பது உலகம் தழுவிய உண்மை. தமிழகமும் அதற்கு விதிவிலக்கல்ல. சங்க இலக்கியங்களின் வழி நாமறியும் பலவகையான வழிபாடுகளில் அதிக அளவில் இடம் பெற்ற ஒன்று வேலன் வழிபாடு ஆகும்.

**வேலன்**

தம் மகள் நோயுற்று மெலிந்து பசந்த நிலையில், தாயர், செம்முது பெண்டிர், மற்றும் பூசாரியாகிய வேலன் ஆகிய இருவர் மீதும் இறைவன் வந்து உண்மையினை உரைப்பதாக நம்பி, நோயின் காரணம் அறியும் பொருட்டு கட்டின் (கட்டுவிச்சி குறி கூறுதல்) வழியும், கழங்கின் (கழங்கெனும் காயை வைத்துக் குறி சொல்லுதல்) வழியும் வேண்டுவர். அவர்கள் அப்பெண்ணுக்கு, 'முருகு' பற்றியிருப்பதே நோய்க்குக் காரணம் என்று கூறவே, முருகனாகிய வேலனுக்கு வெறியாட்டு அயர்தல் பரவலாகக் காணப் படும் நம்பிக்கையும், வழிபாடும் இணைந்த ஒரு நிகழ்ச்சியாகும். இந்நிகழ்ச்சி 'வெறியயர்தல்' என்றும், 'முருகயர்தல்' என்றும் வழங்கப்பட்டன.

முருகன்

இதே முருகன் என்ற சொல் சீற்றத்தாற் சிறந்த ஒருவனையும் குறித்ததை இதே இலக்கியங்கள் காட்டுகின்றன. 'முருகொத்தீயே மாற்றருஞ் சீற்றம்' 'முருகற் சீற்றத்து உருகெழு குரிசில்' 'முருகுறழ் முன்பு' போன்ற அடிகள், முருகனைப் போன்ற சினத்தினையுடைய அரசன் என்ற பொருளில் வழங்கி வந்துள்ளன. எனவே முருகன் சீற்றம் மிக்க கடவுளாக வணங்கப்பட்டான் என்பது வெளிப்படை. வெற்றி பெற்ற வீரர்களுக்கு விழவு எடுக்கும் மரபினைப் 'படைக் களவேள்வி' யென இலக்கணம் கூறும். அத்தகைய விழவும், 'முருகயர்தல்' என்ற சொல்லால் வழங்கப்பட்டதைப் பின்வரும்

'நெறியறிந்த கடிவாலுவன்
அடியொதுங்கிப் பிற்பெயராப்
படையோர்க்கு முருகயர' என்ற மதுரைக் காஞ்சி அடிகள் காட்டும்

## தமிழர் பண்பாட்டில்

எனவே அணங்குற்ற பெண்ணுக்காக வழிபடும் இடத்து, வெறியாட்டின் தலைவனாகி அச்சம் என்னும் நோயைப் போக்கும் வேலனாகவும், வெற்றி பெற்ற வீரர்கள் வழிபடும் இடத்து வெற்றித் தெய்வமான முருகனாகவும் வழிபடப்பட்டான். எனவே தமிழ் மக்களின் வாழ்வில் அகத்திலும், புறத்திலும் (காதல், வெற்றி) சிறப்பிடம் பெற்ற தனிப்பெரும் கடவுள் முருகன் என்பது தெளிவு.[1] இவ்விரு நிலையிலும், முருகன் - வேலன் வழிபாடு இயற்கையான வாழ்க்கைப் பொருள்களைப் படைத்து வழிபடும் வழிபாடாகவே விளங்குகிறது. இறைவனும் சாதாரண மனித இயல்புகளால் மட்டுமே பேசப்படுகிறான். புராணத் தாக்கம் எதுவும் இங்கு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## வடநூற்களில்

சமஸ்கிருத இலக்கியங்களுள் மகாபாரதத்தில் பல இடங்களிலும் இராமாயணத்தில் இரண்டு இடங்களிலும், காளிதாசரின் குமார சம்பவத்திலும், சிறப்பாக ஸ்கந்தனின் பிறப்பு பற்றிய கதைகள் கூறப்பட்டுள்ளது. ஒன்றிற்கொன்று பல மாறுபாடுகளைக் கொண்டு விளங்குகின்றது. மொத்தத்தில், ஸ்கந்தன் அக்னியின் மகனாகவும், சிவனின் மகனாகவும் குறிக்கப்படுகின்றான். எல்லாக் கதைகளிலும் வீரமிக்க மகன் ஒருவனின் தேவைக்காகவே குமரனாகிய ஸ்கந்தனின் பிறப்பு நிகழ்கிறது. எந்தக் கதையிலும் பெற்ற தாயைப் பற்றிய குறிப்பு இல்லை. கங்கை, உமை, கார்த்திகைப் பெண்கள் ஆகிய பலர் ஸ்கந்தனை வளர்க்கும் பொறுப்பினை ஏற்றுள்ளனர். வளர்ந்த ஸ்கந்தன், தேவர் சேனைகளுக்குத் தலைவனாகி, அரக்கர்களைக் கொல்லுகின்றான். இந்திரன் மகளாகிய தேவசேனையை மணக்கின்றான். இவனுக்குத் தேவர்கள் பலரும் பல பரிசுகளை அளிக்கின்றனர்.

## இணைப்பு

தொடக்கத்தில் அகவாழ்வின் இடரினைத் தீர்ப்பவனாகி, தொடர்ந்து சீற்றத்தின் கடவுளாகி வேந்தர்களுக்கு ஒப்பான

வெற்றி வீரனாகத் தமிழகத்தில் விளங்கிய நிலையில், வடநூற்கள் குறிக்கும் ஸ்கந்தனோடு ஒத்த பண்புடையவனாகத் தோற்ற மளித்தான் போலும்!

## தமிழ் பண்பாட்டின் வளர்ச்சி நிலை

கலித்தொகை, பரிபாடல் தவிர்த்த பல எட்டுத்தொகை நூல் களில் தமிழர் வணங்கிய முருகன் தென்படுகிறான். ஆனால், பத்துப்பாட்டுள் ஒன்றான முருகாற்றுப் படையில் இணைப்பின் தொடக்கம் தெரிகிறது. முருகனுக்குக் களம் அமைத்துச் செம்மலர் களால் ஆன கண்ணியைப் புனைந்து, செவ்வாடை அணிந்து காப்புநூல் கட்டி, தினையினை மலரோடு சிதறி, மறி அறுத்து வழிபடும் பண்டைய வழிபாட்டு முறை மிக விரிவாகவும் விளக்க மாகவும் கூறப்படுகிறது. இவ்வழிபாட்டு முறையினைப் பழமுதிர் சோலையில் கூறிய நக்கீரர், திருவாவினன்குடி, திருவேரகம், திருப்பரங்குன்றம் ஆகிய இடங்களில் அந்தணர் வழிபடும் முறை யினைக் கூறுகிறார். இங்கு முருகனுக்கு, வடநூற்களில் உள்ள பிறப்பு மற்றும் தேவர் சேனையின் வெற்றிக் கதைகள் கூறப்படு கின்றன. என்றாலும், இத்தகைய இருவேறுபட்ட வழிபாட்டிடங் களிலும், முருகன் சிறிதுசிறிது காலம் தங்கியிருப்பான் என்று கூறுகிறார் நக்கீரர். இவ்வாறு கூறியதன் மூலம், இருவழிபாட்டு முறைகளிலும் வணங்கப்பெறும் முருகனும், ஸ்கந்தனும் ஒருவரே என்ற கருத்திணைப்பினைக் கூறும் முயற்சி மிக அழகாக வெளிப் படுத்தப்பட்டுள்ளது.

## உறழ்வு

திருமுருகாற்றுப்படையில் சமநிலையில் வைத்து வணங்கப் பட்ட முருகனும், ஸ்கந்தனும் பரிபாடற் காலத்தில் உயர்வு தாழ்வுக்குரியவர் ஆயினர். வேலன் வெறியாட்டின் மூலம் வழி படப்படும் மிகவுயர்ந்த பண்டை வழிபாட்டினைப் 'பேய் விழவு' எனத் தாழ்வுறக் கூறும் நிலையினைப் பரிபாடல் மிகத் தெளிவாக,

> 'காஅய் கடவுள் சேஎய் செவ்வேள்
> சால்வ தலைவனெனப் பேஎ விழவினுள்
> வேலனேத்தும் வெறியும் உளவே' (பரி 5:1313)

என்றுரைக்கிறது. பரிபாடல், முழுவதுமாகவே முருகனுக்கு வட மொழியில் உள்ள பிறப்பு, வளர்ப்பு, மற்றும் தேவசேனைத் தலைமை ஆகிய பண்புகளைப் பாராட்டிக் கூறும் இலக்கியமாக விளங்குகிறது.

இத்தகைய இணைவு ஏற்பட்ட போது, அதனைத் தமிழ்கூறு நல்லுலகம் இறுதியில் ஏற்றுக் கொண்டது என்பது உண்மையே. இது போன்ற இணைப்புக் கடவுளர் உண்டாக்கப்படுவதும் உலகம் தழுவிய பொதுநியதிதான். என்றாலும் தமிழ்ச் சமுதாயம் இவ்விணைப்பினை எவ்வாறு - எந்த வகையில் ஏற்றுக் கொண்டது என்பதை அறிய ஏதுவாக அமைகிறது ஒரு பரிபாடல்.

தமிழகத்தில் சமணம் மிகச் சிறப்பாகப் பெருமகன்கள் (குல மரபுச் சமுதாயத் தலைவர்கள்) மற்றும் வணிகர்களின் ஆதரவோடு உணவு, உறைவிடம், கல்வி ஆகியனவற்றை மக்களுக்கு வழங்கி நெறிப்படுத்தப்பட்ட சமயமாக வளர்ந்த நிலையில், அதனைப் போன்றே வைதிக சமயத்தினையும் வளர்க்கச் செய்யும் முயற்சி களில் அடியார்கள் இறங்கினர். சமண, பௌத்த மதத்தவரும் போட்டியுடன் முனைந்து நின்றனர். மணிமேகலை, நீலகேசி ஆகிய நூல்கள், பௌத்தர்கள் பல்வேறு மதக் கொள்கையினருடன் எதிர்த்து வாதிட்ட தன்மையினைத் தெளிவுறக் காட்டுகின்றன. விரித் துரைத்தல், மறுத்துரைத்தலுக்குப் பின்னர், அவ்வச் சமயத்தினர் தத் தம் கொள்கைகளை நிலைநிறுத்திக் கொண்டனர். வைதிக சமயமும் தன்னை வளர்த்துக் கொள்ளும் வகையில், இந்தியா முழுவதிலும் பல்வேறு பகுதிகளிலும் தொடக்ககால இனக்குழு மக்களிடையே நிலவி வந்த பண்பாட்டுக் கூறுகளையும், வழிபாட்டு முறைகளையும், சமய நம்பிக்கைகளையும் தன்னுள் ஈர்த்துக் கொண்டது. அவ்வப் பகுதிகளில் வணங்கப்பட்டு வந்த தெய்வங்களின் பண்புகள், வைதிக, பௌராணிக நூற்களில் இடம் பெற்ற தெய்வங்களின் கூறுகளோடு ஓரளவு ஒத்திருக்குமானால், அவை இணைத்து ஒன்றாக்கப்பட்டன. இவ்வகையில்தான் வேலனாகிய முருகனும், புராண, இதிகாச ஸ்கந்தனாகிய குமரனும் இணைக்கப்பட்டனர்.

வைதிகத்துடன் இத்தகைய பிற பண்பாட்டுக் கூறுகள் இணைக்கப்பட்டபோது பெரும்பாலும் மோதல்கள் நடைபெற வில்லை என்றே கருதத் தோன்றுகிறது. இருப்பினும் எக்காலத் திலும் பழமைப் பற்றாளர்களும், தூயமரபு காக்க விழைவோரும் இல்லாமல் இல்லை. கலப்புகளால் வளர்ச்சி ஏற்படும் என்பது உண்மையாயினும், பழமை மரபு தன் தனித்தன்மையினை இழந்து விடும் என்ற காரணத்தால் இத்தகைய இணைப்புகளைக் கண்டித்து ஒரு சிலரேனும் தம் கருத்துகளைக் கூறியிருத்தல் வேண்டும். இத்தகைய எதிர்ப்புகளையும், ஈர்ப்புக்களையும் அடிப்படையாகக்

கொண்டு பல பொது மன்றங்கள் விளங்கின என்பதை நாமுணரும் வகையில் சில குறிப்புக்கள் சங்க இலக்கியங்களில் உள்ளன.

பல்வேறு வகையான வேறுபட்ட கொள்கையினை உடையோர் தம் மாறுபாட்டினைக் கூறும் பொதுமன்றங்களில் கொடிகள் ஏற்றப் பெற்றிருந்தன.

'பல்கேள்வித் துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரியர்
உறழ்குறித்தெழுந்த உருகெழு கொடியும்'

(அடி: 169-71)

என்ற பட்டினப்பாலை அடிகள் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த அத்தகைய மன்றங்களைக் காட்டும். இதுபோலத் தண்பரங் குன்றினைப் பாடும் குன்றம்பூதனார்,

'குன்றின்மிசை
ஆடல் நவின்றோர் அவர்போல் செறுப்பவும்
பாடல் பயின்றோரைப் பாணர் செறுப்பவும்
வல்லாரை வல்லார் செறுப்பவும்
அல்லாரை அல்லார் செறுப்பவும் ஓர்சொல்லாய்
. . . . . . . . . . . . . .
படாகை நின்றன்று'

என்று உறழ் குறித்து எழுந்த கொடிகளை விளக்குவதன் மூலம், உறழ்வுகள் (போட்டிகள்) நடந்தன என்பது தெளிவாகிறது.

தமிழக முருகன் அகக்கடவுள்; இவ்வியல்பினை வடநூல்கள் கூறும் கதைகள் எதிலும் நாம் காண இயலவில்லை. தமிழகத்தில் குறவர்தம் மடமகளான வள்ளியை முருகனின் மனைவியாக்கி குறிஞ்சிநில மக்கள் வழிபாடு நிகழ்த்தி வந்தனர். ஆனால் வடக்கிலிருந்து வந்த ஸ்கந்தன் இந்திரன் மகளாகிய தேவசேனையை மணந்திருந்தான். இதனை எவ்வாறு ஏற்றுக் கொள்வது? பிற்காலத்தில் இருவரையும் முருகனின் துணைவியராக்கித் தமிழகம் ஏற்றுக் கொண்டாலும் இவ்விருவரும் இணைக்கப்பட்ட காலத்தில் தமிழ்மக்களின் மனநிலையினைப் படம்பிடித்துக் காட்டுகிறது ஒரு பரிபாடல் (எண் 9)

வள்ளியின் திருமணம், தமிழர்தம் தனிப்பண்பான களவுப் புணர்ச்சியின் பாற்பட்டது. ஆனால் தேவசேனையின் திருமணமோ

பெரியோரால் முடிவு செய்யப் பெற்று நடந்த கற்புப் புணர்ச்சி. இவ்விரண்டில் களவுப் புணர்ச்சியே சிறந்தது என்று கூறுமுகமாகத் தமிழர்தம் தனிப்பண்பாட்டைப் போற்றுகிறார் புலவர். போற்றுவ தோடு நின்றுவிடாமல், இதன் சிறப்பினை நான்மறை அறிந்த, அதன் பொருள் விரித்துப் பெருமை சேர்க்கும் புலவர்கள் அறிய மாட்டார்கள் என்று கூறுகிறார். புலவரின் சொற்கள் இதோ:

'நான்மறை விரித்து நல்லிசை விளக்கும்
வாய்மொழிப் புலவர் கேண்மின்! சிறந்தது
காதற் காமம்; காமத்துச் சிறந்தது
விருப்போ ரொத்து மெய்யுறு புணர்ச்சி;
புலத்திற் சிறந்தது கற்பே . ......
..... . ... .. ...... இத்
தள்ளாப் பொருளியல்பிற் தண்டமிழ் ஆய்வந்திலார்
கொள்ளாரிக் குன்று பயன்'

தமிழருக்கேயுரிய பொருள் இலக்கணமாகிய, வாழ்வியற் பண்பாட்டை[2] அறியாதோருக்குக் களவுப் புணர்ச்சியாகிய காதற் காமத்தின் குன்றன்ன சிறப்பு அறிந்து கொள்ளவும், புரிந்து கொள்ளவும் இயலாது என்பது புலவரின் முடிவு

இதன் அடுத்த கட்டமாக, வள்ளிக்கும், தேவசேனைக்கும் இடையே பூசல் ஏற்பட, இருவரின் தோழியரும், அவ்வவர்தம் மயில், கிளி, வண்டு ஆகிய அனைத்தும் பூசலிட்டுக் கொள்கின்றன வாம். வள்ளியோ, தேவயானையின்பாற் சென்ற முருகனைக் கட்டிவைத்துத் தன்மாலையையே கோலாகக் கொண்டு 'அங்கு செல்லாதே' என்றடிப்பதாகவும், இறுதியில் வள்ளியும், அவள் தமரும் வெற்றிபெறுவதாகவும் கூறுகிறார் புலவர்.

'குறிஞ்சிக் குன்றவர் மறங்கெழு வள்ளிதமர்
வித்தகத் தும்பை விளைத்தான் வெள்வேலோற்கு
ஒத்தன்று தண்பரங்குன்று'

வள்ளி வெற்றி பெறுவதாகக் கூறியதன் மூலம், தமிழர்தம் பண்டை நெறி - தமிழர் பண்பாடு வெற்றி பெற்றதாகத் தன்னுள் அமைதி பெறுகிறார் புலவர். இறுதியில் குமரன், கற்பு இணை நெறியில் (களவு, கற்பு) இருதேவியருடன் விளங்குகிறான் என்று அவரும் வணங்குகிறார்.

## வேள் முருகன்

முருகன் போர்த்தலைவனாகிவிட்ட நிலையில், வளர்ந்து வரும் அரசுகளின் தலைமகன்களுடன் உவமிக்கப் பெறுகிறான். பல்வேறு வேளிரும், வேந்தரும் முருகனின் சீற்றம் உடையர்களாக இலக்கியங்களில் குறிக்கப்படுவது இதனைத் தெளிவுபடுத்தும். தொடக்க கால வேளிரும், வேந்தருமாகிய பெருமகன்களின் வீழ்ச்சிக்குப் பின்னர், வேளாண்மைப் பொருளாதார அடிப்படையில் அரசுகள் தோற்றம் பெறத் தொடங்கியபோது, மதுரையிலும் காவிரிப் பூம்பட்டினத்திலும், வளர்ந்து வரும் சமயக் கோட்பாடுகளைத் திறனாய்வு செய்யவும், ஏற்றுகொள்ளவுமான சூழ்நிலை அமைந்தது. மதுரைக் காஞ்சியும், திருமுருகாற்றுப் படையும், தமிழ் மன்னர்களான பாண்டியரின் ஆதரவில் எழுந்த இலக்கியங்கள். எட்டுத்தொகையுள் பரிபாடலும் மதுரையைச் சுற்றிய சூழலை அடிப்படையாகக் கொண்ட இலக்கியமே என்பதில் கருத்து வேறுபாடிருக்க முடியாது. தமிழ் கெழு கூடலிலும், அதனை ஒட்டிய திருப்பரங்குன்றத்திலும், அரசனுக்கு ஒப்புடைய முருகனாகிய செவ்வேளைப் பற்றிய கருத்துக் கோட்பாடு இணைவில் புத்துயிர் பெற்றது எனலாம்[3].

கி.பி. 7, 8-ஆம் நூற்றாண்டளவில் இக்கருத்துகளுக்குச் சிற்ப வடிவங்கள் கொடுக்கப்பட்டன எனலாம். முருகனுடைய சிற்பங்கள் சிவகங்கை வட்டம் திருமலை, குன்றக்குடி, ஆனைமலை, திருப்பரங்குன்றம், கழுகுமலை, வீரசிகாமணி, மலையடிப்பட்டி, ஆகிய ஊர்களில் உள்ள பாண்டியர் குடைவரைகளில் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் ஆனைமலை, திருப்பரங்குன்றம் தவிர்த்த பிற இடங்களில் எல்லாம், இருகரங்களுடன், தலையில் கண்ணி அணிந்த, வீரக் கச்சையுடன் கூடிய பெரிய வீரனின் தோற்றத்திலேயே வேள் முருகன் வடிக்கப் பெற்றுள்ளான் என்பது ஆழ்ந்த கவனத்திற்குரியது. இதிலெல்லாம் முருகன் தேவியருடன் காட்டப்பெறவில்லை. மறி (செம்மறி ஆடு) சேவல், மயில், ஆகியன இச்சிற்பங்களில் சிறப்பிடம் பெறுகின்றன. இவை சங்க இலக்கியங்களில் இடம் பெறும் முருகனின் தோற்றத்தோடு பெரிதும் தொடர்புடையன. ஆனைமலை, திருப்பரங்குன்றம் ஆகிய இரண்டிடங்களிலும் இணைந்து விட்ட ஸ்கந்த - முருகன் வடிக்கப்பட்டான் எனக் கொள்ளலாம் இவை இரண்டும் அரசின் நேரடி ஆணையில் உருவாக்கப்பட்டவை.[4] எனவே இக்கருத்திணைவுக்கோட்பாடு அரசனின் ஆதரவையும் பெற்று வளர்ந்தது எனக் கருதலாம்.

எனவே தொடக்க காலத்தில் வேலனாக வழிபடப்பட்டு, பெருமகன்கள் (குலமரபு தலைவர்கள்) காலத்தே முருகனாகி, அரசு தோன்றுவதற்கு முன்னுள்ள சுமார் 5-6 ஆம் நூற்றாண்டளவில் பாண்டியரால் பெரிதும் போற்றப் பெற்றுப் பின்னர் அவர் தம் சில குடைவரைகளில் ஸ்கந்தனாகிச் சிறப்பிடம் பெற்ற இறைவனாக ஏற்றம் பெற்றான் என அறிகிறோம்.

இவ்விணைப்பின் போது தமிழரிடையே இந்த சில கருத்து மாறுபாடுகளையும் வென்று ஸ்கந்த முருகன் தமிழகத்திலிடம் பெற்று இன்றுவரை பெருந்தெய்வமாக வணங்கப் பெறுகிறான். இவ்வளர்ச்சி வரலாற்றுத் தேவையினை அடிப்படையாய் கொண்டது.

---

1. வேட்டையாடலை அடிப்படையாகக் கொண்டு உணவு சேகரிக்கும் நிலையில் (food gathering culture) இருந்த மக்களின் தெய்வமாக இந்த முருகன் விளங்குகிறான்.

2. பரிபாடலை பதிப்பித்த உ.வே.சா. அவர்கள் இவ்வடிகள் குறித்து எழுதுமிடத்து ''நான்மறை விரித்து'' என்பது முதலியவற்றாற் பாராட்டியிருக்குந் தமிழ்வழக்கு, தமிழ்மொழியின் கண் இவருக்குள்ள பேரன்பைப் புலப்படுத்தும்'' என்கிறார். உண்மையில் புலவருக்குப் பேரன்பு தமிழ் வழக்கில்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

3. ஏனெனில் அதே காலத்தில் தோன்றிய பல்லவர் முழுவதும் வடமொழி ஆதரவுடையோராய் இருந்தனர். அவர்தம் குடைவரைகளில், பாண்டியர் பகுதிகளில் இருக்குமளவு முருகன் சிற்பங்கள் இடம் பெறவில்லை என்பது நோக்கத்தக்கது திருச்சி மேல் குடவரையில் மட்டும் முருகன் சிற்பம் உள்ளது; எனினும் அது வடஇந்திய வகையில் அமைந்த அறுவகைச் சமயக் கொள்கையினை அடிப்படையாகக் கொண்ட 'ஸ்' கந்தனைக் குறிப்பது.

4. இவ்விரு குடைவரைகளிலும் கல்வெட்டுகள் உள்ளன,

# வஞ்சியும் பெரு வஞ்சியும்

**புலவர். செ. இராசு**
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்

### வஞ்சி

சேரர் கோநகர் வஞ்சிமாநகர் எது என்பது பற்றிய ஆய்வு கடந்த நூற்றாண்டு முதலே அறிஞரிடையே நடந்து வருகிறது. மேலைக்கடல் அருகில் உள்ள கொடுங்களூர் ஆகிய வஞ்சியும், கொங்கு நாட்டுக் கருவூரான வஞ்சியும் இவ்வாய்வில் முக்கிய இடம் பெற்றுள்ளன. ஆய்வு முற்றுப் பெறவில்லை. தொடர்ந்து நடைபெறுகிறது.

### கருவூர் வஞ்சி

ஆய்வுக்குரிய மேற்கண்ட இரண்டு ஊர்களுமே வஞ்சி எனப் பெயர் பெற்றிருந்தன என்பதில் ஐயமில்லை. கொங்கு நாட்டுக் கருவூரே வஞ்சி என்பார் தம் கருத்தைக் "கருவூரும் வஞ்சி" என மாற்றிக் கொள்ளத்தகும் வகையில் சில தனிப்பாடல், செப்பேட்டுச் சான்றுகள் கிடைத்துள்ளன. அவற்றை இக்கட்டுரையில் காணலாம்.

### கொங்கு வஞ்சிகள்

கொங்கு நாட்டுச் சமுதாய ஆவணங்கள் பல அண்மையில் தொகுக்கப்பட்டுத் தமிழ்ப் பல்கலைக் கழகக் கல்வெட்டியல் துறை மூலம் அச்சாகி வெளி வந்துள்ளன. அவ்வாவணங்களில் அனுப்பப் பட்டிச் செப்பேடு என்பதும் ஒன்று. அச்செப்பேட்டின் இடையில் அழகிய வெண்பா ஒன்று இடம் பெற்றுள்ளது. அப்பாடல்,

'கொங்கு மலைநாடும் குளிர்ந்தநதி பன்னிரண்டும்
சங்கரனார் தெய்வத் தலம் ஏழும் - பங்கயம்சேர்
வஞ்சிநகர் நாலும் வளமையால் ஆண்டருளும்
அஞ்சமயர்க் கையுடையோன் காண்'

என்பதாகும்.

"கொங்கு நாட்டு ஆறுகள் பன்னிரண்டு. (அவைகளைக் கொங்கு மண்டல சதகமும், செப்பேடுகளும், ஓலைப் பட்டயங்

களும் தொகுத்துக் கூறுகின்றன). கொங்கு நாட்டில் மூவர் தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் ஏழு. கொங்கு நாட்டில் வஞ்சிநகர் நான்கு உள்ளன. இவைகளைக் கொங்கு அரசர் ஆட்சி புரிகின்றனர்'' என்பது இப்பாடல் மூலம் அறியப்பெறும் செய்தியாகும்.

## நான்கு வஞ்சிகள்

கொங்கு நாட்டில் கிடைத்த தனிப்பாடல் ஒன்று மேற் கண்ட நாலு வஞ்சிகள் எவையென நமக்கு அடையாளம் காட்டு கிறது.

'மாந்தரர்க்கும் மற்றுவரு மன்னவர்க்கும் கொங்குவஞ்சி
ஏந்துபுகழ் சேர்தலைமை ஏய்ந்தபதி - சார்ந்திலகு
சேலமொடு தாரா புரியும் திகழ்கருவூர்
மூலனூர் ஆக மொழி'

என்ற தனிப்பாடல் மூலமாகச் சேலம், தாராபுரம், கருவூர், மூலனூர் ஆகிய நான்கும் 'கொங்கு வஞ்சி' என அழைக்கப்பட்டன என்பது தெளிவாகிறது.

மாந்தரஞ்சேரல் பதிகம் என்னும் பழம்பாடலிலும் சேரர் கொங்கு நாட்டில் வஞ்சியெனும் பெயரால் சில வளநகர்கள் ஏற்படுத்திய விவரம் கூறப்படுகிறது.

## வஞ்சியம்மன் கோயில்கள்

வஞ்சி என்று குறிக்கப்பட்ட சேலம், தாராபுரம், கருவூர், மூலனூர் ஆகிய நான்கு ஊர்களில் சேலத்தைத் தவிர மூன்று ஊர்களில் வஞ்சியம்மன் கோயில்கள் இன்றும் உள்ளன.

## தாராபுரம் - வஞ்சி

இரட்டர், கங்கர், காலம் தொடங்கிக் கம்பெனி ஆட்சி வரை ஏறக்குறைய 1500 ஆண்டுக்காலம் கொங்கு நாட்டின் தலைநகராக விளங்கிய பெருமை தாராபுரத்திற்கு உண்டு. பல ஆவணங்கள் தாராபுரத்தை வஞ்சி என்னும் பெயரால் அழைக்கின்றன.

''ஆதியில் விராடபுரி அதன்பிறகு வஞ்சிபுரி'' ''வஞ்சி லாட புரம் சீலம்'' ''வஞ்சிபுரம் தாராபுரம்'' ''பராந்தகபுரம் தில்லை புகலி வஞ்சி இராசை'' ''கொங்கு வஞ்சி விலாடபுரமான இராச ராசபுரம்'' ''நல்ல புகழ்வஞ்சி லாடபுரம்'' என்பது ஆவணங்களில் கண்ட தொடர்களாகும். எனவே கருவூரைப் போலத் தாராபுரமும் 'வஞ்சி'' என்று பெயர் பெற்றுள்ளமை தெளிவாகிறது.

## பெருவஞ்சி

திருத்தக்கதேவரை ஆதரித்துச் சீவகசிந்தாமணி பாடுவித்த அரசன் "வன்பெருவஞ்சிப் பொய்யாமொழி" என்று சிந்தாமணி உரைப்பாயிரச் செய்யுள் கூறுகிறது. பொய்யா மொழி தலைக் காட்டுக் கங்கமரபில் தோன்றிக் கொங்கு நாட்டுப் பகுதியை ஆட்சி புரிந்த சத்திய வாக்யன் ஆவான். அவன் தாராபுரத்திற்கு அண்மையில் உள்ள கொங்கூரைத் (ஸ்கந்தபுரம்) தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தவன்.

கொங்கூரின் பழம்பெயர் "கொங்கு" என்பதேயாம். அக் கொங்குக்கு அருகில் உள்ளதால் தாராபுரம் கொங்கு தாராபுரம் எனவும் அழைக்கப்பட்டது. தாராபுரம் 'பெரிய தாராபுரம், என்று அழைக்கப்பட்டதை மக்கென்சி ஆவணங்கள் கூறுகின்றன. பெரிய தாராபுரத்தைத்தான் "பெருவஞ்சி" என்று சிந்தாமணி உரைப் பாயிரம் கூறுகிறது போலும்.

---

## எலவானாசூர்ப் பாடல் கல்வெட்டு

கிருஷ்ண தேவராயரின் தந்தை நரசநாயக்கர் காலத்தில் வாழ்ந்து, காஞ்சியில் தனியாட்சி செய்து பின்னர் அவரால் தோற் கடிக்கப்பட்ட குறுநிலத்தலைவன் கோனேரி தேவமகாராயன் ஆவான். காஞ்சிக்கருகில் உள்ள திருவோத்தூரில் இவனது உருவச்சிலை கல்வெட்டுடன் உள்ளது. தன் பெயரில் காசுகளையும் வெளியிட்டவன். அண்மையில் எலவானாசூரில் கிடைத்த பாடற் கல்வெட்டு மற்றும் அதனுடன் உள்ள கல்வெட்டுக் குறிப்பு மூலம் இவனது தந்தை பசவன் சங்கரன் என்பதும், இவன் தம்பி கணப்பராயன் என்பதும் தெரிய வந்துள்ளது. இவன் இறையானறை யூரான இன்றைய எலவானாசூர் இறைவனுக்குச் சூற்றியன் குறிச்சி என்ற ஊரினைத் தானமாக அளித்ததை இக்கல்வெட்டு குறிக்கிறது.

கல்வெட்டு:

'ஸ்வஸ்தஸ்ரீ பட்டுகட்டாரி வசவன் சங்கரன்
கோனேரி தேவ மகாராஜாவின் தம்பியார்'

கச்சிநகர் வாழும் கணப்ப ராய னிறைசை
பச்சையுமை பாகரூர் பாகற்கு - னிச்சையமாக
கோதற்ற வூர்சூற்றி யன்குறிச்சிக் கூடாரை
வாதிக் களித்தான் மகிழ்ந்து

செய்தி— ச. கிருஷ்ணமூர்த்தி
தொல்பொருள் அலுவலர்

# எங்கள் மாணவர்கள்....

தமிழ்நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத்துறை, ஆண்டு தோறும் 8 மாணவர்களுக்கு, கல்வெட்டு, தொல்லியலில் முதுகலைப் பட்டயக் கல்வியினை நடத்தி வருகின்றது. அதில் பயிலும் மாணவர்கள் தத்தம் ஊர்ப் பகுதியில் இருந்து மிகச் சிறந்த அரிய ஆவணங்களைக் கண்டறிந்து வருகின்றனர். சான்றுகளாகச் சில.

இராமநாதபுரம் மாவட்டம், கமுதி வட்டம், அகத்தாரிருப்பு என்ற ஊரிலிருந்து மாணவர் திரு. ச. அழகேசன் படியெடுத்து வந்த கல்வெட்டு. கி. பி. 1865இல் நிகழ்ந்த நிகழ்ச்சியொன்றினை கி. பி. 1925-இல் கல்லில் பொறித்து வைத்துள்ளனர். இடையர் குலத்துத் தம்பதியர் கமுதி சந்தையில் தானியங்கள் விற்றுத் திரும்புகையில், உடை மரம் ஒன்று காற்றில் சாய்ந்து தம் வண்டி மேல் விழுந்து கணவனாரையே மறைத்துவிட, அவர் தம் உடலைக் காணக் கிடைக்காத மனைவி அவ்விடத்திலேயே உயிர் நீத்தாள். மயக்கம் தெளிந்து நினைவு பெற்று மரத்தின் மறைவினின்று வெளிப்போந்த கணவன் பின்னர் 25 ஆண்டுகள் வாழ்ந்து மறைந்தார். அவர்கள் மகள் வயிற்றுப் பேரன்மார் மூவர், பாட்டியார் இறந்த அறுபதாம் ஆண்டில் அவரை வணங்கிக் கல்நாட்டிப் பேரெழுதி அப்பத்தினித் தெய்வத்தைப் பரவினர். கல்வெட்டு இதோ:

1. உடைய னாச்சி பத்தினிக்கல்
2. கலியுகம் 4966 குரோதன ௵
3. ஆனி ௴ 29 கி. பி. 1865 சூலை
4. 11 செவ்வாய் மாலை அமர பக்ஷ
5. ம் திரிதிகை அவிட்டத்தில் ஷெ
6. யார் பரம பதமடைந்தார் வ
7. யது 45 வரலாறு
8. அகத்தாரிருப்பில் யாதவ குல
9. த்தில் பிறந்து வேலுக் கோனாரு
10. க்குப் பாரி ஆகி இல்வாழ்க்கை
11. க புரிந்து வரு நாளில் ஷெ உ யில்

12. நாயகனோடு வண்டியில் தவ
13. சம் கொண்டு போய் கமுதி சந்
14. தையில் விற்று வரும்போது
15. பசும்பொன் கண்மாய் ஐயன் கே
16. காவில் ஒடை மரம் காற்றினால்
17. நாயகன் மேல் விழ இந்த அம்
18. மையார் மரத்தைச் சுற்றி அழு
19. து படுத்து பார்த்த படியே நாயக
20. ன் காணாமல் அந்த இடத்தில் ஏங்
21. கி உயிர் நீங்கினார்
22. காதல் துன்பங் காணாது மா
23. ண்ட மாதரோ பெருந்திரு மரண
24. மடைந்த இப்பத்தினி தேவியை
25. ப்பரசுதல் வேண்டும்
26. மரத்திலகப்பட்ட நாயகன் மயக்க
27. ம் நீங்கி வெளிவந்து 25ஆூ
28. சீவித்து விகுருதி கார்த்திகை மீ
29. பரமபதமடைந்தார்
30. 60 ஆூ முடிந்து
31. 1925 சூலை 15
32. குரோதன ஆூ
33. ஆனி மீ 31ட
34. மகள் பிள்ளைகள்
35. ஆயர்பாடிக்கோன்
36. ராமசாமிக்கோன்
37. நாராயணக்கோன்
38. இவர்களால்
39. ஸ்தாபிக்கப்பட்டது

## 2. காகித ஓலைப் பத்திரம்

மதுரையை அடுத்த நத்தம் கைலாசநாதர் கோயில் திரு. சுந்தரேசக் குருக்களிடம் ஒரு காகித ஆவணச் சுருள் இருப்பது மாணவர் திரு. எம். பி செல்வராஜ் மூலம் அறியப் பட்டது. பயிற்சி நிறுவன ஆசிரியர், திரு. இராசகோபால் அவர்க ளால் சென்று படிக்கப்பட்டது. 12 செ.மீ. அகலமும், 12 செ.மீ. முதல் 35 செ.மீ. வரையிலான நீளமுமுள்ள 26க்கும் மேற்பட்ட துண்டுக் காகிதங்களை ஒன்றின் கீழ் ஒன்றாக இணைத்துச் சுருட்டப் பட்டது இவ்வாவணச்சுருள். இச்சுருள் மூங்கில் குழாய் ஒன்றினுள் சுருட்டி வைக்கப்பட்டு இரும்புக் கவசமிட்ட மூங்கில் மூடியால் மூடப் பட்டுள்ளது. இச் சுருளை அவ்வப்போது எடுத்து இறுக்கமாகச் சுற்றிவைக்காததால் ஆவணத்தின் இறுதிப்பகுதி சிதைந்து விட்டது. ஆவணத்தை விரித்தால் சுமார் 12 மீட்டர் நீளம்வரை விரியக் கூடியது.

14 துண்டுகளில் மராத்தியிலும், 12 துண்டுகளில் தமிழ் மொழி யிலும் கருப்புமையால் எழுதப்பட்டுள்ளது. ஒவ்வொரு துண்டும் ஒட்டப்பட்ட, இடத்தில், இணைப்பில், நெகல்சன் வாட்சுசான் என்பவரது முத்திரை வைக்கப்பட்டுள்ளது. இப்படி முத்திரை இடுவது இணைப்புகளில் துண்டுகளை மாற்றி மோசடி செய்து விடாமல் தடுப்பதற்காகும்.

இது பசலி 1213இல் அதாவது கி. பி. 1803 ருத்ரோத்காரி வருடத்தில் வேடச்சந்தையூர் கச்சேரி (நீதி மன்றம்) அங்கீகரித்த கலிபொன் 290-க்கான கோயில் செலவுத் திட்டமாகும். இணைப்பு களில் இடப்பட்டுள்ள முத்திரை நெகல்சன் வாட்சுசான் என்ற நீதிபதியினுடையதாக இருக்கலாம்.

செலவு விவரம், நாள்தோறும் நிகழும் பூசைகள், திங்கள் தோறும் அமாவாசை, பௌர்ணமி, பிரதோசம், கிருத்திகை சிறப்புவழிபாடுகள் ஆகியன, ஆண்டு தோறும் நிகழும் ஆடிப்பூரம், விநாயகர் சதுர்த்தி, நவராத்திரி, தீபாவளி, திருக்கார்த்திகை, கார்த்திகைச் சோமவாரம், மார்கழித் திருவிழா, திருவாதிரை, தை மகர சங்கிராந்தி, தைப்பூசம், சிவராத்திரி, சித்திரா பௌர்ணமி முதலிய விழாக்கள் என்று தனித்தனியாகப் பிரித்துப் பட்டியலிடப்பட்டுள்ளது. பூசைப் பொருள்கள் ஒவ்வொன்றின் அளவு, அதற்கான பொன் என்று ஒவ்வொரு வழிபாட்டிற்கும்

பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த கலி பொன் 290-இல், பூசை வழிபாடுகள் தவிர ஊழியர் (சிப்பந்தி) செலவுகளுக்கும் பிரிக்கப்பட்டுள்ளது. கோயில் ஊழியர்களாக சுயம்பாகி, பரிசாரகம், திருமஞ்சனம், அத்தியயனம், சம்புரோக்சனம், மந்திர புஷ்பம், உக்கிராணம் ஆகிய ஊழியர்கள் பெயருடன் குறிக்கப் பட்டு அவர்களுக்கான தொகைகளும் குறிக்கப்பட்டுள்ளன.

இவ்வளவு விரிவாக நீதிமன்ற ஆணை இருந்த போதிலும் இன்று இக்கோயிலில் திருவிழாக்கள் ஏதும் நடக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மராட்டியர் காலத்தில் நீதிமன்ற ஆணைகள் மிக விரிவாக எழுதப்பட்டு முத்திரையுடன் தொடர்புடையவர் களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது என்பதற்கு இவ்வாவணம் மிகச் சிறந்த சான்று. ஆவணத்தின் பகுதிகள் சில.

**4 வது (துண்டுச்சேர்ப்பு) ஒட்டு**

1 நத்தம் தேவஷ்தானம் கயிலாஸ
2 நாத சுவாமி நிற் முகரம் கோ . . .
3 பட்டி தாலுகு ந . . . .
4 வேடசந்தயூரு கச்சேறி தி
5 ண்டிக்கல் சற்கார் கும்பி
6 ணி ௲௨௱௰௫ பசலி ரு
7 த்திறோத்காரி ஞூ ஆடி மீ
8 ௧ ௨ முதல் ஆனி மீ கடசி
9 தேதிவறக்கும் வறுஷம் ௧ க்கு
10 நாள் ௩௱௬௰௫, நிசதித்
11 திட்டம்

**15வது ஒட்டு**

12 ௨ ௱௬௰ ய
13 க்கு விபறம்
14 படித்தரம் ஆட்ட விசேஷம் உள்பட ர
15 தோச்சவம் உள்பட ஞ ௱௩௰ளுபுக
16 சிப்பந்தி யினம் (௭), வகை ௧, . .

17 ௬ ௰௨ புசு ஆக மாசம் ௰௨க்கு
18 ௨ ௱௫௰க ய ௨
19 சாதில்லார் சிலவு யஎ
20 ஆக ௨ ௨௱௬௰ ய
21 படிதிரம் தீபாறாதினை ஆட்ட வி
22 சேஷம் மாதோச்சவம் உள்பட
23 கலி ௱௩௰அ யக
24 க்கு விபறம்
25 னித்தியக் கட்டளைப் படித்தரம் தீ
26 பாறாதனைக்கு னாள் க க்கு
27 சக்கரை ய௰
28 வாளைப்பளம் ய சு
29 தேன் ய சுவ
30 மஞ்சள் ய சுவ
31 சந்தணக் கட்டை ய சுவ
32 நெயி ய வ
33 நல்லயெண்ணை அபிசேக
34 த்துக்கும் விளக்குக்கும் ய ௩)சு
35 னூல் ய ௭
36 பாக்குவெத்திலை ய௰
37 சாம்புராணி ய சு
38 கல்ப்பூரம் ய*
39 திருமஞ்ச திருவியம் ய சு
40 அரிசி னெயிவேத்தியத்துக்கு
41 ய க, படி ரு ஆக சவ று

ஒட்டு 16

42 ய ஒ ஹ
43 ஆக நாள் க, நாள் க ஒ ஆக
44 வறுஷம் க, நாள் ௩௱
45 சு* ௫, ௨ சு*௩பு அஒ

46 மாசவிசேஷம் பச்ச பறு
47 வம் உச்சவத்துக்கு மாசம் ச,
48 மாசபொறப்பு அபிசேக
49 னெயிவேத்தியத்துக்கு
50 சக்கரை ட ௨
51 வாளைப்பளம் ட சு
52 தேன் ட சு
53 மஞ்சள் ட ௨
54 திருமஞ்ச திருவியம் புு ஶ
55 சந்தணம் ட ௨
56 பாக்கு வெத்திலை ட சு
57 நல்லெண்ணை ட * சு
58 நெயி ட * சு
59 சூடன் சாம்புறாணி ட சு
60 அரிசி ட ஶ
61 ஆக்கிறயம் ட இஙு
62 அம்மாவாசி அபிசேக நெ
63 யிவேத்தியத்துக்கு ட இஙு
64 கிறுத்திகா நஷத்திரம் பு இஙு
65 பிறதோஷம் உ, ட இஙு
66 ஆக ட *இ

* இக்குறியீடு (பத்து) எண்ணால் குறிக்கப்பட்டுள்ளது.

# DELIVERY SYSTEM IN ANCIENT TAMILNADU

Natana. **KASINATHAN,** M.A.,
Director of Archaeology

This paper tries to focus the attention of the scholars on the delivery system prevailed in ancient Tamilnadu. The earliest source material for knowing the above system come from Sangam literature that are assignable to 5th century B.C. to 5th century A.D. They do not throw light directly on delivery system but they refer to the bathing of mother after delivery and the childhood.

Maduraikkanchi and Narrinai mention about the bath of the mother after having delivered[1] a child. Narrinai also refers to the custom of bath of ghee by a delivered mother.[2] The teeth of tiger was tied around the neck of the child.[3] An ornament which makes sound while moving was also worn to the child.[4]

The literature[5] of medieval period refer to the custom of wearing five weapons around the waist of the child namely conch, wheel, sword, mace and bow. The above weapons were symbolically made either in gold; or silver or in copper and worn. These are the weapons of Lord Vishnu, the protector of the universe. By wearing these weapons to a child, they believed that the child would be protected by the protector Lord Vishnu.

It seems that the children were fed only the mother's milk. For we get terracotta figurines belonging to 9th and 13th centuries. A.D. depicting child's sucking from the breast of its mother.[6] The sculptural representation are also available in South Tamilnadu delineating the same scene. The legends say that the mother would worship these sculptures in order to get blessed more milk in their breasts.

The maternal position of a mother during delivery is seen first from a sculptural representation of Darasuram temple. A panel sculpture found carved on the wall of a pavilion of the western prakara shows the actual position of a mother for her

delivery. She is carved as standing stretching her hands on the shoulders of her attendants who are flanked on both sides. These sculptures are datable to 12th century A.D. i.e. about 800 years ago.

In a painting of Vijayanagar period, drawn on the ceiling of the temple of Tirupparuttikkunram, a suburb of Kanchipuram, a pregnant lady is shown waiting for her delivery. The painting is dated to 16th century A.D.[7]

The Ramayana story is picturesquely drawn on the ceilings of the Mandapa at Srirangam and at Alagarkoyil. There the birth scenes of Lords Rama, Lakshmana, Bharata and Saturukna are exquisitely depicted.

Kausalya, Sumitra and Kaikeyi are drawn as if they are delivering in standing position. Only their uppar parts of the body are visible while the lower part from the chest is covered by a curtain holding by the attendants. These paintings are assignable to 17th century i.e. of Nayak Period.

An eighteenth century evidence is also available in Ramalinga-vilasam, Ramanathapuram. It also accurs in the paintings. Here the Ramayanam and Bhagavatam scenes are beautifully drawn. They also depict the birth scenes of Rama and his brothers and Lord Krishna. Here again the devine mothers are shown in standing position while delivering child. They are also covered upto chest portion by curtains.

The story of the births of Rama, Lakshmana, Bharata and Satrukna are interestingly narrated in painting with label inscriptions at Ramalingavilasam.[8]

"*Kamusalya Pillaipperukiratu*"
(Kausalya gives birth a child)

"*Kaikai meynondu padukiratu*"
(Kaikeyi suffers from labour pain)

"*Kaikaikku baratan pirantan*"
(Kaikeyi gave birth Bharata)

and so on.

After having given birth the children, they involved the children in the following ceremonies.

First they put these children on cradles. Secondly the ear boring ceremony to them was held. Thirdly they were fed by their mothers breasts. (it is stated as follows: ramarukkum Bharatarukkum Laccumanarukkum Chatturukanarukkum tayar vantumolai kuduttattu) Fourthly these children were given butter. Fifthly Ramaswamy was fed milk through conch.

Hence we get clear evidences of the standing position of the mothers during delivery from 12th to 18th century.

From the above narration it is obivious that the people of ancient Tamilnadu had not only taken care of the delivery but also devoted more attention in child's growth and health.

---

1. Maduraikkanchi, ll 600-603: Narrinai, 40:7-8
2. Narrinai 370:3-4
3. Kuruntogai 161: 3-4
4. Purananuru 198: 1-5
5. Kalingathupparani verse 239
6. Terracotta figurine, Aravakkuricchi
7. Chitra Viji, 'An early Vijayanagar Painting, South Indian Studies Vol. I pp. 166-68.
8. Karunanandan, Ramayana Paintings, Kalvettu No. 25

# ஜெயங்கொண்டம் புத்தர், மகாவீரர் சிற்பங்கள்

திருச்சி மாவட்டம், உடையார்பாளையம் வட்டத்தில் அமைந்துள்ளது ஜெயங்கொண்டம் என்ற ஊர். இவ்வூரில் தெற்கு வெள்ளாழத்தெரு கண்ணாரத் தோப்பு என்ற இடத்தில் புத்தர் சிற்பம் ஒன்று உள்ளது. இச்சிற்பம் செவ்வக வடிவான தாமரை பீடத்தின் மீது இருகைகளையும் தொடையிலே அமர்த்தித் தியானநிலையில் காணப்படுகிறது. புத்தர் சிற்பத்தின் இடது தோளில் அங்கி காணப்படுகிறது. கழுத்துப் பகுதியில் மூன்று மடிப்புகள் உள்ளன. புத்தரின் தலையில் சுருண்ட கேசமும், உஷ்நிஷா எனும் நீண்ட முடியமைப்பும் காணப்படுகின்றன. வடிந்து விழும் நீண்ட காதுகளும், எடுப்பான நாசியும், மூடிய கண்களும், தியான நிலையில் இருக்கும் புத்தருக்கு அழகூட்டுகின்றன. புத்தரின் பின்புறம் போதிமரம் காட்டப்பட்டுள்ளது. போதி மரத்தில் இலைகளுடன் கூடிய மரக்கிளைகள் அழகுற வடிக்கப் பட்டுள்ளன. போதி மரத்தில் லிங்க உருவம் காட்டப்பட்டுள்ளது. புத்தரின் தலைப் பகுதியின் பின்புறத்தில் திருவாசி காட்டப் பட்டுள்ளது. திருவாசியும், போதிமரமும் ஒரேக்கல்லில் வடிக்கப் பட்டுள்ளன. போதிமரம் புத்தர் சிற்பத்தின் பின்புறம் ஆரம்பித்து, தலைக்கு மேல் பகுதியில் அரவம் ஒன்று படம் எடுப்பதுபோல் வடிக்கப்பட்டுள்ளது. சிற்பத்தின் உயரம் 170 செ.மீ. அகலம் 55 செ.மீ. இப்புத்தர் சிற்பம் கி. பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சோழர் காலக் கலைப்படைப்பாகும்.

இச்சிற்பம் ஜெயங்கொண்டம் மேலவெள்ளாழத் தெருவிலிருக்கும் நாட்டார் குடும்பத்தினரால் பூஜை செய்யப்பட்டு வருகிறது. இச்சிற்பம் சதுரவடிவான பக்கத்திற்கு 125 செ.மீ. அளவு கொண்ட செங்கல்லாலான பீடத்தில் வைத்துக் கட்டப்பட்டுள்ளது. இப் பீடத்தின்உயரம் 180 செ.மீ. இப்பீடத்தைச் சுற்றிலும் சதுர வடிவான இரும்பு வேலி வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

**மகாவீரர்**

மகாவீரர் சிற்பம் ஜெயங்கொண்டம் நகரின் மேலவெள்ளாழத் தெருவில் காணப்படுகிறது. செவ்வக வடிவான பீடத்தின் மீது மகாவீரர் இரு கரங்களையும் தொடையிலே அமர்த்தித் தியான நிலையில் அமர்ந்துள்ள நிலையில் காணப்படுகின்றார். வழிந்த தலை. தலைக்கு மேற்புறத்தில் வலது, இடது புறங்களில் கீழே வளைந்து, சுருண்டு காணப்படும் தோரணம் இச்சிற்பத்திற்கு அழகூட்டுகிறது. கழுத்தில் மூன்று மடிப்புகள் காணப்படுகின்றன நீண்ட காதுகளும், மூடிய கண்களும் புன்முறுவல் பூத்த முகமும், எடுப்பான நாசியும், இச்சிற்பத்திற்கு வனப்பூட்டுகின்றன. தலைக்கு மேற்பகுதியில் முக்குடை காணப்படுகிறது. ஆடை காணப்படவில்லை. இச்சிற்பத்தின் உயரம் பீடத்திலிருந்து 73 செ.மீ. அகலம் 46 செ.மீ. இச்சிற்பம் கி.பி.10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழர் கலைப்படைப்பாகும். 86 செ.மீ உயரமுள்ள சதுரவடிவில் செங்கற்களால் அமைக்கப்பட்ட பீடத்தில் இச்சிற்பம் வைக்கப்பட்டுள்ளது.

ஜெயங்கொண்டம் பகுதியில் சோழர் காலத்தில் புத்த, ஜைனக் கோயில்கள் இருந்தன என்பதற்கு இவை நல்ல எடுத்துக் காட்டுகள் ஆகும்.

செய்தி: கா. நெடுஞ்செழியன்
காப்பாட்சியர்
கங்கை கொண்ட சோழபுரம்

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் அச்சகத்தில் அச்சிட்டு
இத்துறை இயக்குநருக்காக திருமதி நா. மார்க்சியகாந்தி
உதவிக் கண்காணிப்புக் கல்வெட்டாய்வாளரால் வெளியிடப்பெற்றது.